Appendix I.

[*Vide* answer to starred question No. 587 on page 450 supra.]

Madras City gets the bulk of its requirements of rice from the Andhra Pradesh districts and raw rice is usually imported from Nellore. In December 1963, the Government of India at the instance of the Andhra Pradesh Government imposed a ban on the export of rice from the Nellore District in Andhra Pradesh. As a result of this ban, the normal movement of Nellore rice from Nellore to Madras City stopped abruptly. Following this ban, there was also some procedural delay in the movement of rice purchased from other Andhra Districts through Nellore. This also contributed to some extent to the increase in prices.

2. In view of the serious situation, caused by the complete stoppage of Nellore rice, the matter was taken up with the Government of India immediately, and the ban on the movement of Nellore rice was lifted from 1st January 1964. But simultaneously the Government of Andhra Pradesh introduced a procurement scheme under which (1) every miller or dealer was required to sell to the State Government 40 per cent of his stocks of rice at controlled prices and (2) every person who exported rice to sell to Government 40 per cent of his stocks. As a result of these restrictions the free flow of rice to Madras City from Andhra Pradesh was greatly affected. However at the instance of the Government of India, the Government of Andhra Pradesh later amended their Rice Procurement (Levy) Order (a) reducing the compulsory levy from 40 to 25 per cent; (b) restricting the levy to rice mills; and (c) withdrawing certain restrictions on the movement of paddy and rice from Andhra Pradesh to other States in the Southern Zone.

3. In order to ease the situation, the Government of India were also moved to allot about four thousand tonnes of rice procured by them in Nellore for distribution in the City. Out of this, 2,000 tonnes were received and distributed. Following the decision taken by the Government of India recently, to stop procurement of rice in Madras and Andhra Pradesh States, orders have been issued stopping procurement with effect from 27th June 1964. Andhra Pradesh Government have also taken similar action. It may be expected that with the free flow of rice from one State to another within the Zone, the position may ease.

சென்னை மாநகரம் தனது அரிசித் தேவையில் பெரும் பகுதியை
ஆந்திர மாவட்டத்திலிருந்து பெறுகிறது. பச்சரிசி வழக்க
மாக நெல்லூரிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. 1963
டிசம்பரில் இந்திய அரசாங்கம், ஆந்திரப் பிரதேச அரசாங்கத்தின்
வேண்டுகோளுக்கிணங்கி, ஆந்திரப் பிரதேசத்தில் நெல்லூர் மாவட்
மாவட்டத்திலிருந்து அரிசி ஏற்றுமதி செய்வதற்குத் தடை
விதித்தது. இத்தடையின் விளைவாக நெல்லூரிலிருந்து சென்னை
நகருக்குச் சாதாரணமாய் வரும் நெல்லூர் அரிசி திடீரென

[21st July 1964

நின்றுவிட்டது. இந்தத் தடை உத்தரவை அடுத்து, ஆந்திர மாவட்டங்களிலிருந்து வாங்கிய அரிசியை நெல்லூர் மூலமாக அனுப்புவதற்கான சில நடைமுறைகளிலும் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டது. விலையேற்றத்துக்கு இதுவும் ஓரளவு காரணமாகும்.

2. நெல்லூர் அரிசி முற்றிலும் நின்றுவிட்டதால், நிலைமை மோசமாகிவிட்டது. எனவே இது குறித்து உடனடியாக இந்திய அரசாங்கத்துக்கு எழுதினோம். நெல்லூர் அரிசி அனுப்புவதன் மீதிருந்த தடை 1-1-1964-லிருந்து நீங்கியது. ஆனால் அதே சமயத்தில் ஆந்திரப் பிரதேச அரசாங்கம் கொள்முதல் திட்டம் ஒன்றைக் கொண்டுவந்தது. அதன்படி (1) அரிசி மில் உரிமையாளர் அல்லது வியாபாரி ஒவ்வொருவரும் தனது அரிசி இருப்பில் 40 சதவீதத்தை அந்த மாநில அரசாங்கத்துக்குக் கட்டுப்பாட்டு விலையில் விற்கவேண்டும்; (2) அரிசி ஏற்றுமதி செய்யும் ஒவ்வொரு நபரும் தனது அரிசி இருப்பில் 40 சதவீதத்தை அரசாங்கத்துக்கு விற்க வேண்டும். இந்தக் கட்டுப்பாடுகளின் விளைவாக, ஆந்திரப் பிரதேசத்திலிருந்து சென்னை நகருக்குத் தாராளமாக அரிசி வருவது மிகவும் பாதிக்கப்பட்டது. எனினும், இந்திய அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஆந்திரப் பிரதேச அரசாங்கம் தனது அரிசிக் கொள்முதல் ஆணையில் பின்னர் திருத்தம் செய்துள்ளது; அதன் விளைவாக—

(i) கட்டாயக் கொள்முதல் அளவு 40 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது.

(ii) அரிசி மில்களிலிருந்து மட்டும் கொள்முதல் செய்யப்படும்.

(iii) ஆந்திரப் பிரதேசத்திலிருந்து தென் மண்டலத்தில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு நெல்லும் அரிசியும் அனுப்பப்படுவதன் மீது உள்ள சில கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

3. இந்த நிலையைத் தளர்த்தும்பொருட்டு இந்திய அரசாங்கம் நெல்லூரில் கொள்முதல் செய்த சுமார் 4000 மெட்ரிக் டன் அரிசியை சென்னை நகருக்கு அனுப்பும்படி அதைக் கேட்டிருக்கிறோம். இதில் 2000 மெட்ரிக் டன் அரிசி வந்து வினியோகமாகிவிட்டது. இந்திய அரசாங்கம் தமிழ் நாட்டிலிருந்தும் ஆந்திரப் பிரதேசத்திலிருந்தும் அரிசிக் கொள்முதல் செய்வதை நிறுத்த அண்மையில் செய்துள்ள முடிவையொட்டி, 27-6-1964 முதற்கொண்டு அரிசிக் கொள்முதல் செய்வதை நிறுத்தும்படி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஆந்திரப் பிரதேச அரசாங்கமும் இதே மாதிரியான நடவடிக்கை எடுத்துள்ளது. தென் மண்டலத்திற்குள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு அரிசி தாராளமாகப் போக ஆரம்பித்ததும், நிலைமை சீர்திருந்திவிடும் என்று எதிர்பார்க்கலாம்.

Appendix II.

[*Vide* answer to starred question No. 588 on page 452 supra.]

(*a*) The Government introduced a statutory scheme of procurement of rice in the State with effect from 8th January 1964 with a view to procure one lakh tonnes of rice. Under the statutory Order,